## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 86/2024

Date: 06.02.2026 PW. 2 ( லெட்சுமணன் )

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

நான் எந்த ஊர் என்றால் கொல்லங்குடி கிராமத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அரசிங்கம்பட்டி கிராமம் காஞ்சிராங்கால் ஆகும். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றும் தெரியுமா என்றால் சித்ரா, உமாசுவாமி என்பவருகளுக்கும் 2. 3 பிரதிவாதிகளான சரவணன் அவர்களுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று பட்டா ஆவணம் ஏதும் பாத்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. தாவா சொத்தில் சரியான விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியவில்லை. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியவில்லை. தாவா சொத்தை வாதி பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்தார்களா என்றால் நேரடியாக தெரியாது. 1ம் வாதி உமாசுவாமி எங்கு உள்ளார் என்று தெரியுமா என்றால் வெளிநாட்டில் குவைத் உள்ளார். திருமணம் ஆனதிலிருந்தே அவர் வெளிநாட்டில் உள்ளார் என்றால் சரிதான். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது. 2ம் வாதி சித்ரா எங்கு உள்ளார் என்றால் திருமணம் ஆனதிலிருந்தே கொல்லங்குடியில் தான் உள்ளார். வாதிகளின் அப்பா காசிக்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் தனியாக வீடு உள்ளது. தாவா சொத்தை 4, 5 பிரதிவாதிகள் கிரையம் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் வாங்கியதாக சொன்னார்கள். கேள்விபட்டேன் நேரடியாக தெரியாது. தற்போது தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் என் நிரூபண வாக்குமூலத்தில் 2022ல் இ.சி எடுத்து பார்த்த போது தான் 4, 5 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்து இருப்பது வாதிகளுக்கு தெரியும் என்று சொல்லியுள்ளது குறித்து வாதிகள் இ.சி எடுத்து பார்த்த போது நான் உடன் இருந்த பார்த்தேனா என்றால் இல்லை. இன்று வரை வாதிகளுடன்

1 முதல் 3 பிரதிவாதிகள் அதாவது அம்மா மற்றும் அண்ணன்கள் பேசிக்கொண்டுள்ளார்களா என்றால் இன்று வரை பேசிக்கொண்ட நல்ல உறவுமுறையில் தான் உள்ளார்கள். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எதும எனக்கு நேரிடையாக தெரியாது என்றும் வாதிகள் என்னிடம் சொன்னதை தான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதிகள் என் உறவினர் என்றால் என் அண்ணன் மகள் ஆவார். வாதிகள் எங்கள் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.06 16:52:42 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**